DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.188/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கமல் (சார்பு ஆய்வாளர்) (P.w.6) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of November 2025

( எதிரிகள் ஆஜர். . )

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2022ம் தேதியன்று அ.முக்குளம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை 9.00மணிக்கு காரியாபட்டி தாலுகா சொக்கநேந்தல் கிராமத்தைச் சேர்ந்த வேல்முருகன் மனைவி மங்கையர்கரசி என்பவர் நிலையத்தில்ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 57/2022 இதச பிரிவுகள் 2949பி), 323, 506(1) உ/இ 4 TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் நகல்களை

கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2. பின்னர் அன்றைய தினமே காலை 10.30மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்தனமூர்த்தி , கேசவன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த பார்வை மகஜர் அசாஆ4 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் வாதி மங்கையர்கரசி , வேல்முருகன், முத்துராஜா, சோணையா, சந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முன்பிணை பெற்றபடியால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்தும் இவ்வழக்கின் வாதியை எதிரிகள் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியும், அடித்தும், கொலை மிரட்டல் விடுத்ததும் உண்மை என தெரியவந்ததால் 09.08.2022ம் தேதியன்று எதிரிகள் மீது குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி–**

புகார் மனுவில் பொது இடம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசா1 எந்த ஒரு மருத்துவ சிகிச்சைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவ இடம் காவேரி புஞ்சை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாருடைய பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சோணையா என்ற நபர் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த தேதியில் இருந்து எந்த தேதியில் முக்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றினேன் என்றால் தேதி ஞாபகமில்லை ஆனால் இரண்டுமுறை பணியாற்றி உள்ளேன். 22.07.2022ம் தேதியன்று அ.முக்குளம் காவல்

நிலையத்தில் பணியாற்றினேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை தவறானது என்று எதிரிகள் விருதுநகர் மாவட்ட கண்காணிப்பாளரிடம் மனு அளித்து அது என்னுடைய பார்வைக்கு வந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்த மனு மீது விசாரணை எதுவும் மேற்கொண்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரிகள் கொடுத்த மனுவில் அ.முக்குளம் காவல் நிலைய மனு ரசீது 40/2022 குறித்து தெரிவித்துள்ளார்கள் என்றால் எனக்கு அந்த மனுவில் உள்ள சங்கதிகள் ஞாபகமில்லை, ஆனால் இரு குடும்பத்தினரிடையே இந்த பிரச்சனைக்கு முன்பாக மற்றொரு பிரச்சனை ஏற்பட்டு அதற்கு மனு ரசீது வழங்கப்பட்டது. அந்த பிரச்சனையின்போது எதிரிகள் தரப்பிற்கு அசா1ல் காயம் ஏற்பட்டு அ.முக்குளம்அரசு மருத்துவமனையிலும், காரியாபட்டி அரசு மருத்துவமனையிலும், மேல்சிகிச்சைக்காக விருதுநகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார்கள் என்றால் அதில் நான் மனு ரசீது கொடுக்கவில்லை, ஆனால் சம்பவம் பற்றி தெரியும், அதிலும் பாதிக்கப்பட்டது இவ்வழக்கின் புகார்தாரர்தான். அசா1 பாதிக்கப்பட்டதாக சொல்லும் நிலையில் அதற்காக நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் ஊர்க்காரர்கள் பேசி முடித்துவிட்டதால்நடவடிக்கை வேண்டாம் என்று தெரிவித்துவிட்டார்கள். நான் சொல்வதுபோல் அசா1 எந்த பாதிப்பும்அடையவில்லை என்றாலும் அந்த வழக்கை மறைப்பதற்காக அசா1 பாதிக்கப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1ற்கு சாதகமாக செயல்பட்டதால் எதிரிகள் கொடுத்த புகார் மனுவிற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் விசாரணை செய்யவில்லை என்றால்சரியல்ல. நிலையத்தில் இருந்தவாறே இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.